இந்தப் புதிய வட்டிச் சலுகைத் திட்டத்தின்மூலம் கூட்டுறவு வங்கிகளுக்கு ஏற்படும் வட்டி இழப்பில், 4 சதவீதத் தொகையை மாநில அரசே ஈடு செய்யும்; மீதித் தொகையை அந்த வங்கிகளே ஏற்கும்.

இந்தப் புதிய சிறப்புக் கடன் தீர்வுத் திட்டத்தின்கீழ் வட்டிக் குறைப்புமூலம் உத்தேசமாக ரூபாய் 144.62 கோடியும், அபராத வட்டித் தள்ளுபடி மூலம் ரூபாய் 101.98 கோடியும், இதர செலவுத் தள்ளுபடி மூலம் ரூபாய் 4.61 கோடியும், ஆக மொத்தம் ரூபாய் 251.21 கோடி அளவிற்குத் தள்ளுபடி செய்வதால் அதன்மூலம் ஒரு இலட்சத்து முப்பத்துரெண்டாயிரம் பேர் பயனடைவார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

4. அறிக்கைகள் அளித்தல்

(அ) பொதுக் கணக்குக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். பொதுக் கணக்குக் குழுவின் தலைவர் மாண்புமிகு திருமதி டி. யசோதா அவர்கள்.

திருமதி டி. யசோதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2008–2009 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவின் 157–வது முதல் 161–வது வரையிலான 5 அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

(ஆ) பொது நிறுவனங்கள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகள் அளித்தல். பொது நிறுவனங்கள் குழுவின் தலைவர் மாண்புமிகு திரு. கி. ஆறுமுகம் அவர்கள்.

திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2008–2009 ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவின் 123 மற்றும் 124 ஆகிய இரண்டு அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.